ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்
25.10.2017 - மலர் 14, இதழ் 35





மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப்பூண்டின் மகிமை





இலைகள் 30 செ.மீற்றரைவிட நீளமானவை

வெள்ளைப்பூண்டில் நாம் அறியாத பல மருத்துவ குணங்கள் உள்ளன. வெள்ளைப்பூண்டினை பச்சையாக உட்கொள்வதே சிறந்தது. சமைத்து சாப்பிடும்போது, அதன் மருத்துவ குணங்கள் அருகிவிடுகின்றன. நோய் எதிர்ப்புச்சக்தியை மேம்படுத்துவதிலும் வீக்கங்களுக்கு எதிராக செயற்படுவதிலும் இரத்த அழுத்த நிலையை சமநிலைப்படுத்துவதிலும் வெள்ளைப்பூண்டு சிறந்த பங்காற்றுகின்றது.

ஆரம்ப காலங்களில் வெறும் சுவையூட்டியாகவே வெள்ளைப்பூண்டு பயன்படுத்தப்பட்டது. லில்லி குடும்பத்தினைச் சேர்ந்த இத்தாவரத்தினை எகிப்தியர்களே, முதன்முதலில் மருந்தாகப் பயன்படுத்தியுள்ளனர். இரத்த விருத்திக்கான சிறந்த மருந்தாகவே எகிப்தியர்கள் இதனை கருதியுள்ளனர்.

## பருக்களை போக்கும்

முகப் பருக்களால் அவதிப்படுபவர்களுக்கான சிறந்த தீர்வாக வெள்ளைப்பூண்டு கருதப்படுகின்றது. பருக்கள் உள்ள இடத்தில் பச்சைப் பூண்டை தேய்த்து வந்தால் நாளடைவில் அவை குணமடையும்.





ஒரு பூண்டில் 6-12 வரையான பூண்டுப் பற்கள் இருக்கும்

பூண்டுப் பல்

## வலி நிவாரணி



வலியைப் போக்கும் அரிய மருந்தாகவும் வெள்ளைப்பூண்டு பயன்படுத்தப்படுகின்றது. பச்சைப் வெள்ளைப்பூண்டை நசுக்கி வலி உள்ள இடத்தில் வைப்பதன் மூலம் விரைவில் வலிகளைப் போக்கிக்கொள்ள முடியும்.

## அரிப்புகள் நீங்கும்

பங்கஸ் நோய்களுக்கு எதிராகவும் வெள்ளைப்பூண்டு செயலாற்றுகின்றது. பங்கஸ் நோய்த் தாக்கம் உள்ளவர்கள் இதனை அதிகளவு உட்கொள்வதன்மூலமும் பங்கஸ் தொற்று உள்ள இடங்களில் பூண்டை நசுக்கிப் பூசுவதன்மூலமும் சிறந்த பலனைப் பெற முடியும்.



## அடங்கியுள்ள தாதுக்கள்:

கல்சியம்,
இரும்பு,
மக்னீசியம்,
மெங்கனீஸ்,
பொஸ்பரஸ்,
பொற்றாசியம்,
சோடியம்,
துத்தநாகம்

**விற்றமின்கள்:**

A,
$B_1$, $B_2$, $B_3$, $B_6$,
C

## நோய்த் தொற்றுகளில் இருந்து விடுதலை

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் பிற நுண்ணங்கித் தொற்றுக்களுக்கு உள்ளானவர்களுக்கும் வெள்ளைப்பூண்டு சேர்க்கப்பட்ட கஞ்சியை அருந்தக் கொடுப்பது சிறந்ததாகும். இயற்கையாகவே அதில் காணப்படும் நோய் எதிர்ப்புச்சக்தி காரணமாக, நோய்த் தொற்றின் தாக்கத்திலிருந்து விரைவில் விடுபட முடியும்.

## வயிற்றுப் பொருமலைப் போக்கும்



வயிற்றுப் பொருமல் உள்ளவர்கள் வெள்ளைப்பூண்டை சாப்பிட்டால் நிவாரணம் கிடைக்கும். அத்துடன், பசியின்மையைப் போக்கும் ஆற்றலும் வெள்ளைப்பூண்டிற்கு உண்டு. எனவே, உணவில் விருப்பமின்மை, பசியின்மை போன்ற நிலைகள் ஏற்படின் பூண்டு சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளக் கொடுப்பது நல்லது.

## சிறந்த கண்பார்வைக்கும் கூந்தல் பராமரிப்புக்கும்



கண் பார்வையை மேம்படுத்துவதோடு, கூந்தல் வளர்ச்சிக்கும் வெள்ளைப்பூண்டு உதவுகின்றது. இதனை உட்கொள்பவர்களுக்கு கூந்தல் உதிர்வுப் பிரச்சினையும் கண் பார்வைக் கோளாறும் ஏற்படுவதற்கான வாய்ப்பே இல்லை.

வேர்கள் 50 செ.மீற்றரைவிட நீளமானவை

## இதயத்தைக் காக்கும்



இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்டரோலைக் குறைக்கும் ஆற்றலும் வெள்ளைப்பூண்டிற்கு உண்டு. நாளாந்தம் பூண்டு சாப்பிடுபவர்களுக்கு கொலஸ்ட்டரோல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணி ஆசிரியைமார் புடவைக்குப் பதிலாக சட்டை அணிய அனுமதி!



கர்ப்பிணி ஆசிரியைமார் புடவைக்குப் பதிலாக கர்ப்பிணிமார்களுக்கான சிறப்பு சட்டையொன்றை அணிவதற்கான அனுமதியை கல்வி அமைச்சு வழங்கவுள்ளதாக அறியவருகின்றது.

கர்ப்பிணி ஆசிரியைமார் பாடசாலை செல்லும்போது புடவை அணிவதனால், பலவித அசௌகரியங்களுக்கு ஆளாகின்றமை குறித்து நீண்ட நாட்களாக விசனம் தெரிவித்து வந்துள்ளனர். இதனை கருத்தில் கொண்டே புடவைக்குப் பதிலாக ஒழுக்க சீலமான முறையிலான சிறப்பு சட்டையொன்றை அணிய அனுமதிப்பதற்கான தீர்மானமொன்றை கல்வித்துறை அமைச்சர் மேற்கொண்டுள்ளார். இதற்கமைய, கர்ப்பிணி ஆசிரியைமார் எத்தகைய சட்டைகளை அணிய வேண்டும் என்பது குறித்தான விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# இவர்கள் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களே...!



கடந்த 27.09.2017 ஆம் திகதி 'விஜய்' பத்திரிகையின் 03 ஆம் பக்கத்தில் 'வறுமையால் பாடசாலை செல்லாத பிள்ளைகள்' எனும் தலைப்பில் இடம்பெற்ற செய்தியில் தவறான ஒரு படம் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. படத்தில் இடம்பெற்றிருந்த குறித்த பிள்ளைகள் கிரமமாக பாடசாலைக்குச் செல்கின்ற பிள்ளைகளே என்பதை அறியத் தருகின்றோம்.

மேற்படி படம் தவறுதலாக பிரசுரமாகியதையிட்டும், இப்பிள்ளைகளுக்கும் இவர்கள் சார்ந்தோருக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காகவும் எமது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். நன்றி. -(ஆசிரியர்)

## பாடசாலை மாணவர்களுக்கு மனோவளக் கலை சேவை

அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் பாடசாலைகளில் 'மனோவளக் கலை' (Counselling) சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கல்வித்துறை அமைச்சு அறிவித்துள்ளது. மாணவர்களின் மனோபலத்தை அதிகரிக்கச்



செய்யும் நோக்கிலேயே இச்சேவை நடைமுறைப் படுத்தப்பட இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கென 3,000 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன், அவர்களினூடாக மேற்படி மனோவளக் கலை செயன்முறைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஆரம்ப கட்டமாக 300 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் தரம் 6 இற்கும் சா/தர வகுப்பிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கே மேற்படி மனோவளக் கலை சேவை வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையில் பின்லாந்து பாணியிலான கற்பித்தல் முறை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

இலங்கையின் கற்பித்தல் மற்றும் தொழில்சார் கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதற்கு பின்லாந்து அரசாங்கம் உதவத் தயாராக இருப்பதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ தலைமையிலான குழுவொன்று பின்லாந்துக்கு மேற்கொண்ட பயணத்தின் போதே இது தொடர்பான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கல்வித்துறை அமைச்சர் "உலகிலேயே, சிறந்த கற்பித்தல் முறையை மேற்கொள்ளும் நாடாக பின்லாந்து இனங்காணப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்லாந்து பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் நேரம் வரையறுக்கப்பட்டுள்ளது. தொழில்சார் கற்பித்தல் முறை தொடர்பில் பின்லாந்து நிறுவனங்களின் ஆலோசனைகளை இலங்கைக்கு வழங்கவும் அந்நாட்டு அரசாங்கம் இணங்கியுள்ளது" என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர்; "பின்லாந்து கல்வி முறையையும் இலங்கை கல்வி முறையையும் ஒப்பிட்டுப் பார்த்த வகையில், இலங்கை கல்வி முறையில் மாணவர்களுக்கு பெருமளவில் அழுத்தம் ஏற்படுவதை இனங்காண முடிந்தது. ஆனால், பின்லாந்தில் குறைந்த கற்பித்தல் நேரம், செயன்முறை கற்பித்தலுக்கு முன்னுரிமை வழங்கல், வகுப்பில் வரையறுக்கப்பட்ட அளவிலான மாணவர்களையே அனுமதித்தல், ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனிப்பட்ட ரீதியில் அவதானத்தை செலுத்துதல் போன்ற பயன்மிகு முறைகள் கையாளப்படுவதை அவதானிக்க முடிந்தது. எனவே, பின்லாந்தை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கையின் கல்வித்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதே நமது திட்டமாகும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.




பட உதவி: சண்டே டைம்ஸ்

# ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் வசதிகூடிய பாடசாலைகள் நிறுவப்படும்!

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு மட்டத்திலும் வசதிகூடிய பாடசாலைகள் நிறுவப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நீதித்துறை அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

வசதிகூடிய சிறந்த பாடசாலைகளை நாடும் பெற்றோரின் விருப்பத்தை ஈடுகட்டும் வகையிலேயே, இவ்வாறு ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் வசதிகூடிய பாடசாலைகள் நிறுவப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினூடாக, வெளிநாடுகளில் தொழிலுக்குச் சென்றுள்ளவர்களின் பிள்ளைகளில் தரம் 5 புலமைப்பரிசில் சித்திபெற்றவர்கள், சா/தரம் மற்றும் உ/தரம் சித்திபெற்றவர்கள் ஆகியோர் கல்வியை தொடர்வதற்காக புலமைப் பரிசில்கள் வழங்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால இயந்திரம் 13

## எதிர்காலத்து மனிதர்கள்

அப்போது இன்னொரு பாரிய வெள்ளை நிற உயிரினம் அவர்களை நோக்கி வருவது தெரிந்தது.

ஒரு பலமான ரீங்கார ஓசை கேட்டது. அந்த உயிரினம் பார்ப்பதற்கு மிக விநோதமாக இருந்தது. ஒரு பெரிய பலூனை ஊதி வைத்து, அதற்கு ஆறு கால்கள் பொருத்தியது போல இருந்தது அதன் தோற்றம். முகப்பகுதியிலிருந்து ஒரு குழாய், வெளியே நீள்வதும், உள்ளே செல்வதுமாக இருந்தது. கால்களில் கூரிய நகங்கள் மிகவும் நீண்டிருந்தன. கரப்பான் பூச்சிகளின் அளவுக்கு இல்லை என்றாலும், இதுவும் அளவில் மிக விசாலமாயிருந்தது.

“என்ன கொடுமையடா இது…!?”

“எனக்கு ஒன்று மட்டும் நல்லாத் தெரியுது. நாங்க தப்பான காலத்துக்கு வந்துட்டோம்!”

“இது பூமியா? எனக்கு சந்தேகமா இருக்கு…”

“இந்த உயிரினத்தை நான் எங்கேயோ பார்த்திருக்கேன்”

“பார்த்திருக்கியா..? இவ்ளோ பெரிய மிருகத்தை எங்கேடா பார்த்திருப்பாய்…!?”

“இதே உருவம்… ஆனால் ஏதோ ஒன்று இடிக்குது…”

அந்த வசனத்தை முடிப்பதற்குள் அவர்கள் இருந்த நிலம் திடீரென அப்படியே கீழே இறங்கத் தொடங்கியது. இயந்திரத்துடன் சேர்த்து அவர்கள் நேர் கீழாக ஒரு சுரங்கத்தினுள் சென்றுகொண்டு இருந்தார்கள். மேலே அவர்கள் இருந்த இடம் மறுபடியும் தடயமின்றி மூடிக்கொண்டது. சில நொடிகள் முழுவதுமாக இருள் சூழ்ந்த அந்த சுரங்கத்தின் வழியே அவர்கள் இருந்த இயந்திரம் பயணித்தது. இறுதியாக, ஒரு வெளிச்சமான அதி நவீன பளிச்சிடும் அறைக்குள் வந்ததும், அவர்களது இயந்திரம் ஓய்வடைந்தது. நடப்பது என்னவென்று புரியாமல், அடுத்து நடக்கப்போவதும் அறியாமல் அவர்கள் பயந்து போய் இருக்க, சில மனிதர்கள் அவர்களை நோக்கி வந்தார்கள்.

“டேய்… நல்லாப் பாரு… அவங்க உண்மையான மனுஷங்க தானா…!? இல்லை இதுவும் ஏதோ வினோத உயிரினங்களா…?!?”

“மனிதர்கள்தான்… சந்தேகமில்லை”

அப்போது, முன்பு போலவே ஒரு ட்ரோன், கால இயந்திரத்தின் முன்பாக பறந்து வந்து, பல்வேறு மொழிகளிலும் பேசத் தொடங்கியது. இந்த முறை வினித் தாமதிக்கவில்லை.

“நாங்கள் தமிழர்கள். எங்கள் மொழி தமிழ்”

இயந்திரத்தின் முன் பல்வேறுபட்ட மனிதர்கள் நின்றுகொண்டிருந்தனர். கறுப்பு இனத்தவர்கள், ஐரோப்பியர்கள், மொங்கோலிய இனத்தவர்கள், என்று பல ரகம். அவர்களுள் ஒரு தெற்காசிய தோற்றம் கொண்ட மனிதர் முன்னே வந்தார்.

“வணக்கம் ! இருபத்தேழாம் நூற்றாண்டு உங்களை அன்புடன் வரவேற்கிறது ! நீங்கள் பயப்படாமல் கதவைத் திறந்து வெளியே வரலாம்”

நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். மறு வார்த்தை எதுவும் பேசவில்லை. நின்ற இடத்தை விட்டு நகராமல்,

**தொடர்கதை…**

அப்படியே சிலை போல நின்றனர். அந்த மனிதர் மறுபடி பேசினார்,

“நீங்கள் தயங்காமல் கதவைத் திறந்துகொண்டு வாருங்கள். உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. நாங்கள் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறோம். உங்கள் கிளிக்கும் மருத்துவ உதவி தேவைப்படுகிறது”

சிறுவர்கள் பேசிக்கொண்டார்கள்…

“போகலாமா..??”

“அவர்களுக்கு எப்படி எங்களைப் பற்றித் தெரியும்..!?”

“பேசாமல் உள்ளேயே இருந்து விடலாம்…”

“அப்போ… கிள்ளையின் கதி…?!”

இறுதியில், அவர்கள் வெளியே செல்வதென்று முடிவெடுத்தார்கள். இயந்திரத்தின் கதவைத் திறந்து, ஒவ்வொருவராக வெளியேறினார்கள். வர்ஷா கிளியை தன் கைகளில் ஏந்திக்கொண்டு வெளியே வந்தாள். அப்போது ஒரு ட்ரோன் பணிந்து வந்து, அதன் மேற்புறம் இருந்த தட்டில் கிளியை வைக்குமாறு கேட்டுக்கொண்டது. வர்ஷா வினித்தைப் பார்த்தாள்.

வினித் தலை அசைத்ததும் அவள் அந்த ட்ரோன் கேட்டுக்கொண்டதை போலச் செய்தாள்.

(தொடரும்)



-ஜெ.விபாகர்

# அசட்டுக் கழுதை


ஒரு நாள் ஒரு கானகத்தில் வாழ்ந்த சிங்கத்திற்கு இரை ஏதும் கிடைக்கவில்லை. எங்கெங்கோ அலைந்து திரிந்தும் இரை சிக்காது வருத்தத்துடன் இருந்தது. அது பசியின் கொடுமையால் நீண்ட தூரம் நடந்து கானகத்தின் அருகில் உள்ள ஒரு கிராமத்தை அடைந்தது. அங்கு வைக்கோற்போர் ஒன்றின் அருகில் கழுதை ஒன்று நிற்பதை சிங்கம் பார்த்தது. மகிழ்ந்து போன சிங்கம் அதனை இரையாக்க நினைத்து அதனை நோக்கி ஓடியது. அப்போது வைக்கோற்போர் மேல் நின்ற சேவல் ஒன்று 'கொக்கரக்கோ' என்று கூவியது. சேவலின் குரல் என்றாலே சிங்கத்திற்கு அலர்ஜி 'இப்படி ஒரு பயங்கரமான குரலா?' சிங்கம் நடு நடுங்கியது. மீண்டும் சேவல் 'கொக்கரக்கோ' என்று கூவியது. அவ்வளவுதான், கழுதையை இரையாக்கும் எண்ணத்துடன் ஓடி வந்த சிங்கம் பின்னங்கால் தன் பிடரியில் அடிபட திரும்பி ஓடத் தொடங்கியது. அப்போதுதான் கழுதை சிங்கத்தைப் பார்த்தது. 'அட என்னைப் பார்த்துத்தான் சிங்கம் பயந்து ஓடுகிறதோ! நான் என்ன அத்தனை ஆபத்தானவனா? இந்தச் சிங்கத்தை நான் விரட்டிச் சென்றால் என்ன? மற்ற விலங்குகளும் என்னைப் பார்த்துப் பயப்படுமே' என்று நினைத்தது.



அதன் நினைப்பை சேவலும் புரிந்து கொண்டது. “கழுதையே நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்குமாம் நீ உயிர் பிழைத்த வரை உனக்கு லாபம் என்று எண்ணிக் கொண்டு இங்கிருந்து ஓடிப் போய்விடு” என்று சேவல் அறிவுறுத்தியது. ஆனால் கழுதை அதைக் கேட்பதாக இல்லை. “அட…. சிங்கமே என்னைப் பார்த்துப் பயந்து ஓடுகிறது; நீ ஒரு சாதாரண சேவல் எனக்கு அறிவுரை சொல்கிறாயா?” என்று ஏளனமாகப் பேசியது கழுதை. 'சரி…சரி நல்லது சொன்னா யார் தான் கேட்கிறீர்கள்! அனுபவித்தால்தான் புரியும் போ…. போ” என்றது சேவல். கழுதை புயலெனக் கிளம்பியது. 'இதோ உன்னைப் பிடிக்கிறேன் பார்' என்றபடி தொடர்ந்து விரட்டிச் சென்றது கழுதை.

சற்றுத் தொலைவில் சிங்கம் நின்றது. தனக்குப் பின்னால் 'தட தட' வென்று யாரோ ஓடி வருவதை அறிந்து திரும்பிப் பார்த்தது. கழுதை கனைத்தபடி தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்ட சிங்கம் 'அட… இரை கைவிட்டுப் போய் விட்டது என்று வருந்தினேனே! என்னைத் தேடி ஓடி வருகிறதே இந்த கழுதை!' என்று மகிழ்ந்தது. அடுத்த நொடியே சிங்கம் கர்ச்சனையுடன்அருகில் வந்த கழுதையை ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அடித்து வீழ்த்தியது. அசட்டுக் கழுதை அலறியபடியே தன் உயிரை மாய்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகாலம் தொட்டு விவசாயத்துடன் தொடர்புடைய பல்வேறு பொருட்களை தயாரிப்பதில் மக்கள் பழக்கப்பட்டிருந்தனர். இதனைக் குடிசைக் கைத்தொழில் எனலாம்.

குடிசைக் கைத்தொழில் உற்பத்திகள் கைத்தொழிற் சாலைகளின் உற்பத்தியாக மாறியமைக்கு காரணம் பல்வேறு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை உருவாக்கப்பட்டமையே ஆகும். கைத்தொழிற் சாலைகளில் நீராவிச்சக்தி, நிலக்கரி, எரிபொருள் என்பன பயன்படுத்தப்பட்டன. கைத்தொழிற் சாலைகள் தோன்றியமையால் அதுவரை காலமும் நிலவிய சமூக, பொருளாதார கட்டமைப்புகள் முழுமையாக மாறின. இதனால், கைத்தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கான உற்பத்தியின் அளவு அதிகரித்தது. இதன் பயனால் பொருட்களின் விலைகள் குறைந்தன. உற்பத்திகளின் அளவு அதிகரித்தமையால் புதிய வர்த்தக சந்தைகளை தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. மனித சமுதாயத்திற்கு புதிய வகை பொருட்களை கையாளப் பழக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது.

1760-1830 க்கும் இடைப்பட்ட யுகத்தில் இந்த மாற்றம் பெருமளவு இங்கிலாந்தின் இரும்பு, நிலக்கரி, உருக்கு மற்றும் புடவைக் கைத்தொழில்களில் ஏற்பட்டன. பின்னர் இம்மாற்றமானது, ஏனைய கைத்தொழில்களுக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவின. பிற்காலத்தில் இது 'கைத்தொழில் புரட்சி' என பெயர் பெற்றது. இப்புரட்சிகர மாற்றங்களினால் கைத்தொழில் புரட்சியின் காரணமாக, முழு உலகினதும் சமூக முறை மாற்றமடைந்தது.

## கைத்தொழில் புரட்சியின் பின்புலம்

18 ,19 ஆம் நூற்றாண்டுகளில் பிரித்தானியாவில் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலகட்டத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் உலகில் பல நாடுகள் பிரித்தானிய குடியேற்ற நாடுகளாக அவர்களின் ஆட்சியின்கீழ் இருந்தன. அதனால், தமது நாட்டின் கைத்தொழில் முன்னேற்றத்திற்காக, தமது குடியேற்ற நாடுகளில் இருந்து மூலப்பொருட்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள பிரித்தானியாவால் முடிந்தது.


தனியார் துறையின் பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையீடுகளை முதன்முதலில் தவிர்த்துக்கொண்ட நாடு பிரித்தானியாவாகும். அடம் ஸ்மித் என்பவரால் முன்வைக்கப்பட்ட சுதந்திர வர்த்தகம் குறித்த எண்ணக்கரு பிரித்தானியாவால் ஒரு கொள்கையாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கைத்தொழில் நடவடிக்கைகளில் புதுமைகள் புகுத்தியமையால் விவசாயம் நவீன மயமாகி விருத்தியடைந்தது. கைத்தொழிலுக்குத் தேவையான எரிபொருளாகப் பயன்படும் நிலக்கரியினை தேவையான அளவு பிரித்தானியாவிலேயே பெறக்கூடியதாக இருந்தது. 19 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி இத்தகைய பின்புலத்திலேயே இங்கிலாந்தில் ஏற்பட்டது. இங்கிலாந்தில் ஆரம்பமான இக்கைத்தொழில் புரட்சியானது, பின்னர் ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி என பிற நாடுகளுக்கும் பரவின.

## புடவைக் கைத்தொழிலில் நவீன இயந்திரம்

கைத்தொழில் புரட்சி காரணமாக, ஆடைக் கைத்தொழிலில் பல்வேறு இயந்திரங்கள் உருவாகின. இவற்றில் மிகவும் செயற்றிறன் மிக்கதாக 1769 ஆம் ஆண்டில் ஆக்ரைட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட நீர்ச்சக்தியினால் இயங்கும் 'நீர்ச் சட்டகம்' (water frame) எனப்படும் நூல் நூற்கும் இயந்திரத்தைக் குறிப்பிடலாம். இதன்மூலம் நூல் நூற்பது துரிதப்படுத்தப்பட்டது. 1779 ஆம் ஆண்டில் க்ரோம்ப்டன் அவர்களால் மியூல் (Mule) எனும் கருவி கண்டுபிடிக்கப்பட்டமையால் அதிக அளவில் நூல் நூற்பதற்கும் வசதிகள் உண்டாகின.


இரண்டாவதாக ஆடைகளை நெய்யும் இயந்திரங்கள் உருவாகின. 1785 ஆம் ஆண்டில் எட்மண்ட் காட்ரைட் அவர்களால் வலுத்தறி (Power Loom) உருவாகியது. பின்னர் அதனை இங்கிலாந்தின் ஆடைத்தொழிற்சாலைகள் பயன்படுத்தின.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"கைத்தொழிற்சாலைகளில் இயந்திரங்களை இயக்குபவர்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான வேலைகளில் ஈடுபடுவோரிடையே தொழில் பகிர்வுகள் நிகழ்ந்தன. வேலைகள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அதன்படி, ஓரிடத்தில் ஒரே விதமான வேலைகளே இருந்தன. மற்றைய இடத்திலும் அதே விதமாகவே இருந்தன. இதன் காரணமாக, வேலைப் பகிர்வு அல்லது தொழிற்பகுப்பு எனும் எண்ணக்கரு கைத்தொழில்சாலைகளில் ஏற்பட்டன.

**அகராதி**

Industrial Revolution - கைத்தொழில் புரட்சி
Manufacturing Processes - உற்பத்திச் செயற்பாடுகள்
Steam Power - நீராவிச் சக்தி
Production Methods - உற்பத்தி முறைகள்
Textile Industry- ஆடைக்கைத்தொழில்
Innovations- புதுமை புகுத்துதல்
Modern Production Methods- நவீன உற்பத்தி முறைகள்
Standard of Living- வாழ்க்கைத் தரம்
Economic Changes- பொருளாதார மாற்றங்கள்
Medium of Exchange- பரிமாற்று ஊடகம்

## இரும்பும் உருக்கும்

இரும்பை சூடேற்றுவதற்காக, பல்வேறு இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன. அதனால், இரும்புற்பத்தி அதிகரித்தன. இரும்பைவிட, உருக்கு அதிக சக்திவாய்ந்ததாக இருந்தது. இரும்பில் இருந்து பொஸ்பரஸை நீக்கிவிட்டு உருக்கினை உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். இதனால், இங்கிலாந்தில் இரும்பும் உருக்கும் சமமாக வளர்ச்சி அடைந்தன.

## நிலக்கரிக் கைத்தொழில்

கைத்தொழிற்சாலைகளின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்ய நிலக்கரி தேவைப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் இங்கி லாந்தில் நிலக்கரி கைத்தொழிலும் வளர்ச்சி அடைந்தது. நிலக்கரிச் சுரங்கங்களில் நீர்நிறைவதை தடுப்பதற்காகவும் நிறைந்த நீரை இறைப்பதற்காகவும் 1763 இல் ஜேம்ஸ் வொட் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி இயந்திரத் தைப் பயன்படுத்தினர்.

## தொழிற் பகுப்பு

கைத்தொழிற்சாலைகளில் இயந்திரங்களை இயக்குபவர்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான வேலைகளில் ஈடுபடுவோரிடையே தொழிற்பகுப்புகள் நிகழ்ந்தன. அதன்படி, ஓரிடத்தில் ஒரே விதமான வேலைகளே இருந்தன. வேறோர் இடத்திலும் அதே விதமாகவே இருந்தன. அதனால், வேலைப் பகிர்வு அல்லது தொழிற் பகுப்பு எனும் எண்ணக்கரு கைத்தொழிற்சாலைகளில் ஏற்பட்டன.

## தொழில் தேர்ச்சி

ஒரு கைத்தொழிற்சாலையில் ஒரே வேலையை நாள் முழுவதும் தொடர்ந்து செய்வதாலும் ஒரே வேலையை திரும்பத் திரும்பச் செய்வதாலும் அத்தொழிலாளிக்கு அவ்வேலை குறித்து விசேட தொழில்தேர்ச்சி கிடைக்கின்றது. இதன் காரணமாக, ஆலைத்தொழில் சம்பந்தப்பட்ட பயிற்சி, உழைப்பு, தேர்ச்சி போன்ற எண்ணக்கருக்கள் தோன்றின.

க.பொ.த.(சா.தர பாடத்திட்டத்திற்குட்பட்டது





# ரத்திடம் கையளித்த
# ழில் புரட்சி

## தர நிர்ணயம்

தொழிற்சாலைகளில் இயந்திரமயமாக்களின் காரணமாக, ஒரு பக்கம் மூலப்பொருட்களை உள்ளே செலுத்தினால் மறுபக்கம் முடிவுப் பொருட்களாக அவை வெளிவந்தன. அப்பொருளை தயாரிக்கும்பொழுது அவ்வவ் படிமுறை சரியான முறையில் முடிப்பது மிகமிக அத்தியாவசியமாகும். அதனால், ஒவ்வொரு படிமுறையிலும் மற்றும் முடிவுப்பொருளை தெரிவுசெய்யும்போதும் அது சரியான தரத்தை கொண்டுள்ளதா என தேட வேண்டிவரும். இதனால்தான் தொழிற்சாலைகளில் தர நிர்ணயம் என்ற எண்ணக்கரு தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: ................................................

01) பின்வரும் பந்தியை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

எமது நாடு இயற்கை வளம் நிறைந்த அழகிய நாடு. எனவேதான் உல்லாசப்பிரயாணிகள் அதிகம் வருகை தருகின்றனர். இதனால் இலங்கை துரித அபிவிருத்தி அடைந்து வருகிறது. வியாபார நடவடிக்கைகளும் அதிகரிக்கின்றன. உணவட்டுன, கொக்கல, ஹிக்கடுவ, பென்தொட்ட போன்ற தென் கரையோரப் பிரதேசங்களில் உல்லாசப்பிரயாணிகளுக்கான விடுதிகள் காணப்படுகின்றன.

இதேபோன்று மலைநாட்டுப் பிரதேசங்களான கண்டி, நுவரெலியா, ஹட்டன் போன்றவையும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடங்களாகும். இதனால், இவ்விடங்களில் பலதரப்பட்ட தொழில்வாய்ப்புகளையும் பெறக்கூடியதாக உள்ளது. இதன்மூலம் இலங்கைக்கு அதிக வருமானமும் கிடைக்கின்றது.

01. உல்லாசப்பிரயாணிகளுக்காக எங்கு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன?

.......................................................................

02. பந்தியிலுள்ள மலைநாட்டு நகரங்கள் இரண்டு தருக.

.......................................................................

03. உல்லாசப்பிரயாணிகளால் இலங்கை எவ்வாறு அபிவிருத்தி அடைந்து வருகிறது?

.......................................................................

04. பந்தியிலுள்ள நிகழ்கால, படர்க்கை, பலவின் பால் வினைச்சொல் ஒன்று தருக.

.......................................................................

05. வெளிநாடுகளில் இருந்து இலங்கையைச் சுற்றிப் பார்க்க வருபவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

.......................................................................

06. இலங்கைக்கு அதிகளவில் உல்லாசப்பிரயாணிகள் வரக் காரணம் யாது?

.......................................................................

07. உல்லாசப்பிரயாணிகளைக் கவர்ந்த தென் கரையோரப் பிரதேசங்கள் எவை?

.......................................................................

08. ஒத்த கருத்துச் சொல் தருக.

1. வியாபாரம் - ........................
2. அதிகமாக - ........................

09. எதிர்ச்சொல் தருக.

1. நாடு - ........................
2. இயற்கை - ........................

10. பிரித்தெழுதுக.

1. கரையோரம் - .............. + ..............
2. மலைநாடு - .............. + ..............




02) பின்வரும் வாக்கியங்களின் உவமைச் சொற்களை தருக.

01. சமுத்திரம் போன்ற குளங்களைக் கட்டினர்.

.......................................................................

02. பஞ்சுக் குவியல் போன்று முகில் கூட்டம் காணப்பட்டது.

.......................................................................

03. சிறுவர்களுக்கு தேனீ போன்ற சுறுசுறுப்பு வேண்டும்.

.......................................................................

03) பின்வரும் இணைமொழிகளை வைத்து வாக்கியம் அமைக்க.

01. அல்லும் பகலும் - ..............................................
02. முட்டி மோதி - ..............................................
03. நடையுடை - ..............................................

04) பின்வரும் பழமொழிகளை பூரணப்படுத்துக.

01. நித்தம் போனால் ..............................................
02. ஆனைக்கும் ..............................................
03. நிறை குடம் ..............................................

05) கொடுக்கப்பட்ட சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.

நாங்கள் எங்கள் நீங்கள் உங்கள்

01. ........................ எங்கேயும் செல்ல வேண்டாம்.
02. ........................ வீட்டு வேலைகளை ........................ கவனமாகச் செய்யுங்கள்.
03. ........................ பாடசாலை எனது வீட்டுக்கு அருகில் உள்ளது.
04. ........................ வருமுன் ........................ கடைக்குப் போய் வருகிறோம்.

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

### சுற்றாடல்

(ஒக்டோபர் 18 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2 | 05. 3 | 09. 1 | 13. 1 | 17. 3 |
| 02. 1 | 06. 1 | 10. 4 | 14. 1 | 18. 1 |
| 03. 1 | 07. 1 | 11. 4 | 15. 4 | 19. 4 |
| 04. 2 | 08. 3 | 12. 3 | 16. 2 | 20. 1 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாசிப்பு மாதத்தையொட்டி

# மாவனெல்லை ஸாஹிராவில் விசேட கருத்தரங்கு



தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாவனெல்லை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துமுகமாகவும் வாசிப்பில் ஊக்கத்தை ஏற்படுத்துமுகமாகவும் விசேட கருத்தரங்கு ஒன்று 'விஜய்' பத்திரிகையின் அனுசரணையில் நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கில் 'விஜய்' பத்திரிகையின் ஆசிரியர் வி. றெட்லி ஹெரிசன், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தமிழ் பிரிவு அதிகாரி அமீர்ஹுசைன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர். பாடசாலையின் அதிபர் எம்.எம். ஜெவாட் அவர்களின் வழிகாட்டலின்கீழ் பாடசாலையின் ஊடகப் பிரிவு பொறுப்பாசிரியர் எம். எச்.எம். நவாஸ் அவர்கள் இக்கருத்தரங்கு நிகழ்வுகளை நெறிப்படுத்தியிருந்தார்.




விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

Thoovaanam SMS செயற்படுத்தும் முறை

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

இவ்வார கூப்பன் - 25.10.2017

விடை : ..............................

பெயர் : ..............................

முகவரி : ..............................

தொ.பே.இல: ..............................

பாடசாலை : ..............................

..............................

கையொப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
25.10.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

3 பரிசில்கள் போட்டி - 11.10.2017
விடை: செஸ் (Chess)
வெற்றியாளர்:
எம்.பி.ஸபானா,
55/1, முந்துவ மாவத்தை,
இரத்தினபுரி.

Gift sponsored by:
www.srijob.com









# ஹெலிகொப்டருக்கு வயது 110


ஹெலிகொப்டர் அறிமுகமாகி 2017 ஆம் ஆண்டுடன் 110 வருடங்கள் நிறைவுபெறுகின்றது. பிரான்சியரான போல் கோர்னு என்பவர் முதலாவது ஹெலிகொப்டர் தயாரிப்பிற்கான திட்டத்தை 1907 இல் முன்வைத்தார். இன்றுவரை உலகில் பல்வேறு ஹெலிகொப்டர் மாதிரிகள் (Model) தயாரிக்கப்பட்டுள்ளன.



**1907**
*Paul Cornu Twin rotor*
பிரான்சியரான போல் கோர்னு என்பவரால் இரு சுழலும் தகடுகளுடன் கூடிய உலகின் முதலாவது ஹெலிகொப்டர் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 20 விநாடிகளே, வானில் பறந்தது.




**1923**
*C4 - Autogyro*
ஜூஅன் ஆன் டி லா சிவெரா அவர்களால் முதன் முதலாக 'ஒடோகைரோ' எனும் பறக்கும் சாதனம் பரீட்சிக்கப்பட்டது.





**1936**
*focke wulf fw 190*
ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட இந்த ஹெலிகொப்டர் மணிக்கு 122 கி.மீற்றர் வேகத்தில் பறந்தது.



**1942**
*Sickrosky R-4*
2ஆம் உலக யுத்தத்தின்போது, புகழ்பெற்று விளங்கிய அமெரிக்கத் தயாரிப்பாகும்.





**1946**
*Bell Model 47*
உள்நாட்டு மக்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட முதலாவது ஹெலிகொப்டர் இதுவே.

**1959**
*Bell UH-1 'Huey'*
மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஹெலிகொப்டர் இதுவாகும். இன்றும் பாவனையில் உள்ளது.




**1961**
*H- 3 Sea King*
ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ ஹெலிகொப்டர் இது.




**1962**
*CH - 47 Chinook*
அதிக எடையுடன் இந்த ஹெலிகொப்டருக்கு நீண்ட தூரம் பயணிக்கவும் முடியும். இராணுவத்தினரின் போக்குவரத்திற்கும் போர் வாகனங்களைக் கொண்டு செல்லவும் இதனைப் பயன்படுத்துகின்றனர். 2030 ஆம் ஆண்டுவரை பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**1966**
*MH-53 Pave low*
ஐக்கிய அமெரிக்காவின் மிகப் பெரிய ஹெலிகொப்டர் இதுவேயாகும். இன்று தொழில்நுட்ப ரீதியில் அதிஉயர் நிலையில் இருக்கும் ஹெலிகொப்டரும் இதுவே.





**1967**
*Mi - 8 Hip.*
ரஷ்ய உற்பத்தியான இது அன்றும் இன்றும் உலகிலேயே மிக அதிகமாக தயாரிக்கப்பட்ட ஹெலிகொப்டர் வகையாகும்.

**1967**
*Bell 2016 Jetranger*
பொதுமக்களின் தேவைகளுக்குப் பெரிதும் விரும்பப்படும் ஹெலிகொப்டர் வகை இதுவாகும்.

**1966**
*MI - 12 Homer*
இது உலகிலேயே, தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய ஹெலிகொப்டராகும். இன்று உலகில் இரண்டு மாத்திரமே உள்ளன.






**1974**
*Mi - 24 Hind.*
உலகிலேயே, மிக வேகமாகத் தாக்கும் ஹெலிகொப்டர்களில் இதுவும் ஒன்று. வேகம் மணிக்கு 335 கி.மீற்றர் ஆகும்.

**1978**
*Westland Lynx*
மிக வேகமான ஹெலிகொப்டர் வகையாகும். 1986இல் மணிக்கு 400.87 கி.மீற்றர் வேகத்தில் பறந்து சாதனை படைத்துள்ளது.




**1979**
*UH - 60 Blackhawk* ஒரு முறையில் 11 இராணுவ வீரர்களைக் கொண்டு செல்ல முடியும்.





**1984**
*AH-64 Apache*
கடும் தாக்குதல் வகை ஹெலிகொப்டராகும். ரொக்கட் மற்றும் ஏவுகணை உள்ளிட்ட பல ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளன.



**2017**
*Ka-52 Alligator*
ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இது இன்றைய உலகில் மிக நவீனமயமான ஒரு ஹெலிகொப்டராகும்.



**2007**
*V-22 Osprey*
இந்த ஹெலிகொப்டர் செங்குத்தாக மேலெழும்பி கிடையாகப் பறக்கக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதனால், ஹெலிகொப்டராகவும் விமானமாகவும் இதனால் செயல்பட முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒரு நாளைக்கு பிரதானமாக மூன்று வேளைகள் உணவு உட்கொள்ள வேண்டும். இது தவிர, இடைப்பட்ட நேரத்தில் தேநீர் மற்றும் சிற்றுண்டிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.



# உணவு  வேளைகள்


உரிய வேளையில் உணவு உட்கொள்வதை நாம் வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன், நாம் உட்கொள்ளும் உணவுகள் ஆரோக்கியமானதாகவும் சத்துமிக்கதாகவும் இருக்க வேண்டும்.



- காலை உணவு
- பகல் உணவு
- தேநீர் மற்றும் சிற்றுண்டிகள்
- இரவு உணவு




## புள்ளிகளை இணைத்து வடிவங்களை வரைவோம்





## A எழுத்தினுள் மறைந்துள்ளவற்றை இனங்கண்டு நிறந்தீட்டுங்கள்



மறைந்துள்ள உருக்கள்: **Airplane, Alligator, Apple, Anchor, Ant, Acorn, Avocado, Arrow**



## பொருத்தமான பாகங்களை வெட்டி ஒட்டுங்கள்

-நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



.........................



.........................



.........................

baseball field
classroom
playground
music room
library
science lab
art room
school yard



.........................



.........................




.........................



.........................



.........................



01. இந்த பண்ணையில் வளர்க்கப்படும் விலங்கினம் யாது?
1. ஒட்டகம் 2. கழுதை 3. குதிரை

02. பந்து விளையாடிக்கொண்டிருப்பவர்கள்;
1. ஆண்கள் 2. சிறுவர்கள் 3. வயோதிபர்கள்

03. பண்ணையிலுள்ள விலங்குகளுக்கு இரண்டு வாளிகளில் பண்ணையாளர் நீர் எடுத்துச் செல்கின்றார்.
1. ஆம் 2. இல்லை

04. இங்கு காணப்படும் வாகனம் யாது?
1. லொறி 2. உழவு இயந்திரம் 3. மாட்டு வண்டி







✵ இடது கையிலுள்ள $B_2$ போத்தல் வலது கைக்கு இடம்மாறும்போது, இடது கைக்கு வரும் போத்தல் எது?

..........................................

✵ எழுத்துக்கள் மட்டும் பொறிக்கப்பட்ட போத்தல்கள் எவை?

..........................................

✵ என்னென்ன நிறத்தில் இவ்விரண்டு போத்தல்கள் உள்ளன?

..........................................

✵ எந்த நிறத்திலான போத்தல்கள் கூடியளவில் உள்ளன?

..........................................




01. இங்கு காணப்படும் போக்குவரத்து சாதனங்களில் நீர்ப்பரப்பில் செல்லக்கூடியவை எவை?

..........................................

02. அதிகளவு பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய போக்குவரத்து சாதனங்களை குறிப்பிடுக.

..........................................

03. இரண்டு சக்கரங்கள் மற்றும் நான்கு சக்கரங்களைக் கொண்ட வாகனங்களைப் பெயரிடுக.

..........................................

04. நீளமான போக்குவரத்து சாதனம் யாது?

.......................................... -ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவெளிகளை நிரப்புக



__a__e



__a__e



__ai__



__ay



__ __a__e



__ay





## விடை தருக

| | |
|---|---|
| $6 - 5$ | $4 - 2$ |
| $5 - 1$ | $6 - 3$ |



## ஒரே மாதிரியான வடிவத்துடன் இணையுங்கள்



## படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதி குறுக்கெழுத்துப் போட்டியை பூர்த்தி செய்க




## குறுக்கெழுத்துப் போட்டி: 263

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | |
| | 3 | ■ | ■ | ■ | |
| | | 4 | | | 5 |
| 6 | | | 7 | ■ | |
| | ■ | | ■ | ■ | ■ |
| | ■ | | | | 8 |

### மேலிருந்து கீழ்

1. நீர்த்துளி.
2. மனதை ஒருநிலைப்படுத்தி மேற்கொள்ளும் செயற்பாடு. (குழம்பியுள்ளது)
4. வியாபாரம்.
5. ஞாபகத்தில் வைத்திருத்தல். (குழம்பியுள்ளது)
7. தேன். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. வழக்குகள் விசாரணை செய்யப்படும் இடம்.
3. எவர்?. (மாறியுள்ளது)
5. வைத்தியம். (குழம்பியுள்ளது)
6. 'சூரியன்' என்றும் அர்த்தப்படும். (குழம்பியுள்ளது)
8. நாய்க்கு இந்த சக்தி அதிகம் உண்டு. (மாறியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி: 262

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 எ | வ | ரெ | ஸ் | ட் | ■ |
| ழு | ■ | ■ | ரி | 2 சு | 3 ப |
| த் | ■ | ம் | 4 க | 5 ரொ | க் |
| 6 தா | டை | ■ | 7 தூ | வ | ல் |
| ள | ■ | ழு | ■ | டி | 8 க |
| ன் | க | 9 வ | 10 சே | ■ | ■ |

## அறிவுக்கு விருந்து (11.10.2017) விடைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையில் வானியல் மற்றும் விண்வெளித் துறைகளின் வளர்ச்சி கருதி ஐம்பது வருடங்களுக்கும் மேலாக, பத்திரிகையில் விஞ்ஞானக் கட்டுரைகளை எழுதியும் மேற்படி துறை சம்பந்தமான சொற்பொழிவுகளையும் ஆற்றிப் பாரிய சேவையை வழங்கி வருகின்ற ஆர்.பி அத்தபத்து அவர்களின் சேவையைப் பாராட்டும் விதமாக, அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியின்போது, 'இலங்கை அறிவு வங்கி'யின் தலைவரும் பழம்பெரும் வானியல் விஞ்ஞானியுமான அநுர சீ. பெரேரா அவர்களினால் கோள்மண்டலத்தைப் பிரதிபலிக்கும் அழகிய உருவப் படைப்பொன்று ஆர்.பி. அத்தபத்து அவர்களுக்கு வழங்கப்பட்டதை படத்தில் காணலாம்.

விஜய் விழா உலா
த.பெ.எண்:2037
கொழும்பு




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரக்கோன் கேட்போர்கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற அகில இலங்கை ரீதியிலான அறிவுக் களஞ்சியப் போட்டியில் கா/துந்துவ முஸ்லிம் மகா வித்தியாலயம் சார்பாக கலந்துகொண்ட ஏ.எஃப்.ஏ. பர்ஸான், எம்.எம்.எஃப். நுஸ்ஹறா, எஸ்.எச்.எஃப்.சஸ்னா, எம்.ஏ.எஃப்.அஸ்ரா, ஆர்.என்.ரிஷானா ஆகிய மாணவர்களை உள்ளடக்கிய குழுவினர், மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். அந்த நிகழ்வினையே படத்தில் காண்கிறீர்கள்.

தகவல்: எம்.எஸ்.எஃப்.பஸ்லட்
(அறிவுக் களஞ்சிய பொறுப்பாசிரியை)



எஸ். சமாயா கோசிலி,
விக்னேஸ்வரா தமிழ்
மகா வித்தியாலயம்,
பன்வில.



மி.மனோஜ்,
இநி/ ந. மீனாட்சியம்மாள் வித்தியாலயம்,
எந்தானை.



கி.ஷபிசேக்,
மெதடிஸ்த மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.





போல் பிரவீன்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



எஸ். உஷா நந்தினி,
மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.



எம். சுமித்ராதேவி,
இ/எம்.பி/ பரியோவான் தமிழ் கல்லூரி,
இறக்குவானை.

## முள்ளம்பன்றி மீன்கள்

கடலில் 'முள்ளம்பன்றி மீன்' என்றொரு மீன் வகை காணப்படுகின்றது. இந்த மீன்களை இரையாக்கும் வேறு இனத்தைச் சேர்ந்த மீனினங்கள் முடிவில் ஆபத்தினையே எதிர்நோக்குகின்றன. இரையாக வேறு மீன்களின் வயிற்றுக்குள் போகும் இந்த முள்ளம்பன்றி மீன்கள், அங்கிருந்துபடியே தன் உடலை பலூன்போன்று உப்ப வைக்கின்றது; இதன்போது அதன் உடலில் இருக்கும் முட்கள் விறைப்புத் தன்மையைப் பெற்று



நிலைக்குத்து நிலையை அடைகின்றன. இந்த முட்களைக் கொண்டு விழுங்கிய மீனின் வயிற்றைக் கிழித்துவிட்டு இந்த மீன் இனம் வெளியே வந்து உயிர் பிழைத்து விடுகின்றது. இம்மீனினம் அதிக விஷத் தன்மைக் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரத்தினாலான கார்



ஜப்பானைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மரத்தினாலான கார் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக அவர்கள் மரக்கூழைப் பயன்படுத்துகின்றனர். எதிர்வரும் காலத்தில் வாகனங்களின் உலோகப் பகுதிகளை மரத்தினால் செய்வதே இவர்களின் எதிர்பார்ப்பாகும்.

இன்றைய காலத்தில் வாகனங்களும் இயந்திரங்களும் பெரும்பாலும் உலோகங்களினால்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனினும், பண்டைய காலங்களில் இவையனைத்தும் மரத்தினால்தான் செய்யப்பட்டன என்பதை சுட்டிக்காட்டும் ஆய்வாளர்கள், இத்திட்டம் வெற்றியளித்தால், எதிர்காலத்தில் மிகவும் எடை குறைந்த வாகனங்கள் உற்பத்தி செய்யப்படும் வாய்ப்புகள் ஏற்படும் என தெரிவித்துள்ளனர். அதற்கமைய, ஒரு வாகனத்தின் எடையை 10 சதவீதத்தினால் குறைக்க முடியுமாயின் 8 சதவீத எரிபொருள் செலவினை மிச்சப்படுத்திக்கொள்ள முடியும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மரத்தினால் வாகனங்களை உற்பத்தி செய்து அவற்றை மின்சாரத்தினால் இயக்க முடியுமாயின், அது சுற்றாடலுக்கு ஏற்புடைய செலவு குறைந்த முயற்சியாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.





உலோக வாகனங்களைப் போன்றே, மரக்கூழினால் செய்யப்படும் வாகனங்களும் பலமானதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், உலோக வாகனங்களை உற்பத்தி செய்வதைவிட மரக்கூழ் வாகனங்களை உற்பத்தி செய்வது 80 சதவீதம் இலகுவானது என்றும் கூறப்படுகின்றது. மேற்படி, வாகன உற்பத்திக்கென தயாரிக்கப்படும் மரக்கூழினால் 300°C வெப்பத்தினையும் தாங்கிக்கொள்ள முடியும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers
helping shape opinions
THE SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror
www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆயுபோவன்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

දුව: අම්මේ! හෙට විභාග ප්‍රතිඵල එනවලු.
அம்மே! ஹெட்ட விபாக ப்ரதிபல எனவலு.
மகள்: **அம்மா! நாளைக்கு பரீட்சைப் பெறுபேறு வருகிறதாம்.**

අම්මා: ඔව් දුව, මමත් පත්තරේ දැක්කා.
ஒவ் துவ, மமத் பத்தரே தெக்கா.
அம்மா: **ஆம் மகள், நானும் பத்திரிகையில் பார்த்தேன்.**

දුව: මට නම් හරි බයයි අම්මේ.
மட்ட நம் ஹரி பயய் அம்மே.
மகள்: **எனக்கென்றால் சரியான பயம் அம்மா.**

අම්මා: ඇයි දුව බයවෙන්නේ?
எய் துவ பயவென்னே?
அம்மா: **ஏன் மகள் பயப்படுகிறீர்கள்?**

දුව: මට ලකුණු කීයක් තියෙයිදෝ දන්නේ නැහැ.
மட்ட லகுணு கீயக் தியெய்தோ தன்னே நெஹெ.
மகள்: **எனக்கு எத்தனை புள்ளிகள் கிடைக்குமோ தெரியாது.**

අම්මා: දුව හොඳට ලිව්වා නම් හොඳ ලකුණු ලැබෙයි.
துவ ஹொந்தட்ட லிவ்வா நம் ஹொந்த லகுணு லெபெய்.
அம்மா: **மகள் நன்றாக எழுதியிருப்பின் நல்ல புள்ளிகள் கிடைக்கும்.**

දුව: අසමත් වුණොත් තාත්තා බනීද දන්නෙ නැහැ.
அசமத் வுணொத் தாத்தா பனீத தன்னெ நெஹெ.
மகள்: **சித்திபெறாவிட்டால் அப்பா ஏசுவாரோ தெரியாது.**

අම්මා: නැහැ දුව, තාත්තා බනින්නේ නැහැ.
நெஹெ துவ, தாத்தா பனின்னே நெஹெ.
அம்மா: **இல்லை மகள், அப்பா ஏசமாட்டார்.**

දුව: ඒ වුණාට තාත්තා විභාගෙ හොඳට කරන්න කිව්වනේ.
ஏ வுணாட்ட தாத்தா விபாகெ ஹொந்தட்ட கரன்ன கிவ்வனே.
மகள்: **எனினும், பரீட்சையை நன்றாக எழுதும்படி அப்பா சொன்னாரே.**

අම්මා: ඉතින්, පාස් වෙන්නම ඕනේ කියලා තාත්තා කිව්වෙ නැහැනේ.
இதின், பாஸ் வென்னம ஓனே கியலா தாத்தே கிவ்வெ நெஹெனே.
அம்மா: **இனி, சித்திபெறவே வேண்டும் என்று அப்பா சொல்லவில்லையே.**

: ලකුණු සීයට (100ට) වැඩිය තිබුණොත් ඇති.
லகுணு சீயட்ட (100ட்ட)
வெடிய திபுனொத் எத்தி.
: **நூறு புள்ளிகளுக்கு மேல் இருந்தால் போதும்.**

දුව: ආ.. මට සීයට වැඩිය ඇති.
ஆ... மட்ட சீயட்ட
வெடிய எத்தி.
மகள்: **ஆ... எனக்கு 100 இற்கு மேல் இருக்கும்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. பத்திரிகையில் பார்த்தேன்.
..........................................
2. நல்ல புள்ளிகள் கிடைக்கும்.
..........................................
3. அப்பா ஏசுவாரோ தெரியாது.
..........................................




## இறந்தகால தனி வாக்கியம் மற்றும் எதிர்கால தனி வாக்கியம்

**மேற்காணும் இரு வகை வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.**

அ) The manager informed me.
முகாமையாளர் எனக்குத் தெரிவித்தார்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஆ) The manager will inform me.
முகாமையாளர் எனக்குத் தெரிவிப்பார்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ The manager informed. (Past tense)
முகாமையாளர் தெரிவித்தார். (இறந்தகாலம்)

★ The manager will inform. (Future tense)
முகாமையாளர் தெரிவிப்பார். (எதிர்காலம்)

★———★———★———★

இ) The teacher blamed your brother.
ஆசிரியர் உனது சகோதரனைக் குறை கூறினார்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஈ) The teacher will blame your brother.
ஆசிரியர் உனது சகோதரனைக் குறை கூறுவார்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ The teacher blamed. (Past tense)
ஆசிரியர் குறை கூறினார். (இறந்தகாலம்)

★ The teacher will blame. (Future tense)
ஆசிரியர் குறை கூறுவார். (எதிர்காலம்)

★———★———★———★

உ) That parcel fell down from the table.
அந்தப் பொதி மேசையில் இருந்து கீழே விழுந்தது.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஊ) That parcel will fall down from the table.
அந்தப் பொதி மேசையில் இருந்து கீழே விழும்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ That parcel fell down. (Past tense)
அந்தப் பொதி கீழே விழுந்தது. (இறந்தகாலம்)

★ That parcel will fall down. (Future tense)
அந்தப் பொதி கீழே விழும். (எதிர்காலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெ. ஆபிரிக்கா குளோபல் T20 ஒத்திவைப்பு

அடுத்த மாதம் நடைபெறவிருந்த முதலாவது தென்னாபிரிக்க குளோபல் லீக் T20 போட்டித் தொடரை ஒத்திவைப்பதற்கு தென்னாபிரிக்கா தீர்மானித்துள்ளது. அதற்கமைய, அடுத்த வருடம் நெவெம்பர் மாதத்தில் இப்போட்டித் தொடரை நடந்துவதற்கு குளோபல் லீக் கமிட்டியும் தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபையும் ஒருமித்த முடிவை எடுத்துள்ளன. எனினும், மேற்படி தீர்மானத்தையிட்டு, தென்னாபிரிக்க விளையாட்டு சம்மேளனம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இதேவேளை, இது குறித்து கருத்துத்தெரிவித்துள்ள இங்கிலாந்தின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான கெவின் பீட்டர்சன், "தென்னாபிரிக்க இளம் வீரர்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதி இது" என தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் அழிவிற்கே இது வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# கால்பந்தாட்ட வீரருக்கு ஆலோசகர் பதவி





போர்த்துக்கல் நாட்டின் அதிசிறந்த கால்பந்தாட்ட வீரராக முத்திரை பதித்த முன்னாள் வீரர் லுயிஸ் ஃபிகோவிற்கு சர்வ தேச கால்பந்தாட்ட சம்மேளனம் ஆலோசகர் பதவியொன்றை வழங்கியுள்ளது. பார்ஸிலோனா அணியில் இடம்பெற்றிருந்த லுயிஸ் ஃபிகோவிற்கு இப்போது வயது 40. கால்பந்துத் துறையில் காணப்படுகின்ற நுட்பங்கள் மற்றும் விதிமுறை கட்டமைப்புக்கள் குறித்து அவதானத்தை செலுத்தும் நோக்கிலேயே இப்பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# கோஹ்லியை கவர்ந்த பாகிஸ்தான் பந்துவீச்சாளர்!



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராத் கோஹ்லியிடம் அவருக்கு துடுப்பாடுவதில் சிரமத்தை ஏற்படுத்திய, அச்சுறுத்தலான பந்து வீச்சாளராக யாரைக் கருதுகின்றீர்கள்? என ஒரு பேட்டி நிகழ்ச்சியில் கேட்டபோது "பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் அமீர்தான் தனக்கு சிரமத்தை ஏற்படுத்திய பந்துவீச்சாளர்" என கோஹ்லி கூறியுள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவித்த கோஹ்லி, "உலகிலுள்ள சிறந்த மூன்று பந்துவீச்சாளர்களில் மொஹமட் அமீரும் ஒருவர். அவரின் கடுமையான பந்துவீசும் பாணியை நான் மிகவும் ரசிப்பதுடன் அதற்கு துடுப்பெடுத்தாடுவதும் மகிழ்ச்சியாகவே இருப்பதுண்டு" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# டென்னிஸ் வீரருக்கு போட்டித் தடை



டென்னிஸ் ஆட்டக்களத்தின் ஒழுக்க விதிமுறைகளை மீறிய குற்றத்திற்காக, அமெரிக்க டென்னிஸ் களத்தில் போட்டியிட்ட இத்தாலியின் டென்னிஸ் வீரர் ஃபாபியோ ஃபொக்னினிக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் 96, 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி போட்டியில் நடுவருக்கு எதிராக் நடந்து கொண்ட குற்றத்திற்காகவே இத்தண்டனைக்கு அவர் உள்ளாகியுள்ளார். ஸ்டெஃபானி டிரெவகிலியாவிடம் தோல்வியுற்றதையடுத்தே, இவர் இவ்வாறு நடுவர் மீது காழ்ப்புணர்வை வெளிக் காட்டியுள்ளார். முப்பது வயதாகின்ற ஃபொக்னினி உலக டென்னிஸ் தரப்படுத்தலில் 28 ஆவது இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# இத்தாலிய சைக்கிளோட்டப் போட்டி முதற்தடவையாக இஸ்ரேலில் ஆரம்பம்

உலகின் முதன்மை நிலை சைக் கிளோட்டப் போட்டியாக கருதப்படுகின்ற இத்தாலி சைக்கிளோட்டப் போட்டிகளை ஐரோப்பாவிற்கு வெளியே இருந்து ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் அதன் வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெறவுள்ளது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள மேற்படி சைக்கி ளோட்டப் போட்டியின் முதற்கட்டத்தை இஸ்ரேலில் இருந்து ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் ஜெருசலேம் நகரிலிருந்து ஆரம்பமாகும் இப்போட்டியின் முதற்கட்டம் 10 மீற்றர் தூரம் வரை சென்று ஜெருசலேம் நகரிலேயே நிறைவு பெறுவதுடன், இரண்டாம் கட்டமாக 167 கி.மீற்றர் தூரம் வரையான போட்டி ஹைஃபா தொடக்கம் டெல் அவீவ் வரை நடைபெறும். மூன்றாவது கட்டமானது, பீர்ஷெல்வா தொடக்கம் நெஜவ் பாலைவனம் ஊடாக, எலியப் வரை 226 கி.மீற்றர் தூரம் வரை நடைபெறும். இத்தாலியில் இப்போட்டி நடைபெறுவது இது 101 ஆவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தபால் சேவை

மனித வரலாற்றின் ஆரம்பகாலம் முதல் மனிதர்களிடையே தகவல் பரிமாற்றத்தில் பல்வேறு முறைகள் கையாளப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. தகவல் பரிமாற்ற முறைகளில் ஒன்றான தபால் சேவையை முதன்முதலில் எகிப்தியர்களே அறிமுகப்படுத்தியுள்ளனர். அது கி.மு.4000-2500 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலாகும். அப்போது சித்திர எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட களிமண் தகடுகள் மூலமே தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பிற்காலத்தில் எழுத்துப் பயன்பாடு, வர்த்தக நடவடிக்கைகளில் வளர்ச்சி, நகரமயமாதல் போன்ற பல்வேறு நாகரிக முன்னேற்றங்களுக்கமைய, தபால் சேவையிலும் பல்வேறுபட்ட முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இதனடிப்படையில், இலங்கையில்கூட, காலத்திற்குக்காலம் தபால் சேவையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

## இலங்கையில் தபால் சேவை ஆரம்பம்

கி.பி. 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒல்லாந்தர்களினால் இலங்கையில் தபால் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த காலப்பகுதியில் ஒல்லாந்தர்கள் தமது ஆட்சியின்கீழ் இருந்த நாடுகளுக்கிடையில் தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்வதற்காக, கடல் மார்க்கமாக விசேட படகுச் சேவையினை ஆரம்பித்திருந்தனர். இது 'பெக்கட் படகுச் சேவை' என்று அழைக்கப்பட்டது.

## இலங்கையில் தபாலகங்களின் ஆரம்பம்

ஒல்லாந்தர்கள் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர், உள்நாட்டில் தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்ளவென கொழும்பு, காலி, திருகோணமலை, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தபாலகங்களை நிறுவினர்.

## தபால் திணைக்களம் நிறுவப்படல்

கி.பி. 1796இல் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பிரித்தானியர் வசமாகின. பிரித்தானிய ஆட்சியின்போது, கெப்டன் கெனடி என்பவர் இலங்கையின் முதலாவது தபாலதிபராக நியமிக்கப்பட்டார். இவரது பதவிக்காலத்தில் சில தபாலகங்களை உள்ளடக்கியதாக தபால் திணைக்களம் நிறுவப்பட்டது.



## தபால் சேவை விஸ்தரிப்பு

கி.பி. 1815இல் இலங்கை முழுமையாக பிரித்தானியரின் ஆட்சிக்குள் வந்ததையடுத்து, தபால் சேவைகள் படிப்படியாக முன்னேற்றமடையத் தொடங்கின. 1830இன் பின்னர் பெருந்தோட்டத்துறை நடவடிக்கைகள் ஆரம்பமானதையடுத்து, தபால் சேவையின் தேவைகள் அதிகரித்தன. இதனால் அதுவரை இருந்த தபாலகங்களின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டதுடன், தபால்களைப் பகிரும் பணிகளும் விஸ்தரிக்கப்பட்டன. இலங்கையின் முதலாவது தபால் அதிபராக நியமனம் பெற்ற இலங்கையராக வாசல முதலி ஏ.ஜீ. திலகரத்ன என்பவர் கருதப்படுகின்றார்.

## தபால் விநியோகம்

இலங்கையில் தபால் விநியோக முறை ஆரம்பமானதை அடுத்து, கால்நடையாகவும் மிதிவண்டிகளிலும் மாட்டு வண்டிகளிலும் குதிரை வண்டிகளிலும் தபால் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. காலப்போக்கில் போக்குவரத்துத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டதோடு; புகைவண்டி, கப்பல், விமானங்கள் மூலமும் தபால் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன், பண்டைய காலம் முதல் வீடுகளுக்கு கடிதங்களை விநியோகிக்கும் முறை அமுலில் இருந்தது. தபால் விநியோகப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ளவென முழு இலங்கையையும்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## உலக தபால் தினம்

**1969 ஆம் ஆண்டு ஜப்பானின் டோக்கியோ நகரில் ஒன்றுகூடிய உலக தபால் சங்க மாநாட்டின் போது, அதன் நிறைவு நாளான ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி உலக தபால் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதனை அடுத்து, ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி நூற்றுக்கணக்கான நாடுகளில் உலக தபால் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.**



உள்ளடக்கியதாக தபால் பரிமாற்றப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

### கடல் மார்க்க தபால் சேவை

தேச சஞ்சாரம், தொழில் நுட்பமயம், சர்வதேச வர்த்தகம் மற்றும் உலகம் முழுவதும் மக்களின் பரவல் போன்ற காரணங்களுக்காக, கடல் மார்க்க தபால் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. இது இலகுவானதும் இலாபகர மானதுமான ஒரு முறையாகும். ஆரம்ப காலங்களில் இதற்காக, வணிக கப்பல்கள் பயன்படுத்தப் பட்டதுடன், 1850இன் பின்னர் கடல் மார்க்க தபால் சேவைகளுக்காக பிரத்தியேக கப்பல்கள் பயன்படுத்தப்பட லாயின.







### விமானம் மூலம் தபால் சேவை

விமானத்தின் அறிமுகத்துடன் தபால் போக்குவரத்துக்காக வும் விமான சேவை பயன்படுத்தப்பட்டது. 1920இல் பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடு கள் தபால் போக்குவரத் துக்கென விமானங் களைப் பயன்படுத் தின. அந்தவகையில், இலங்கையிலும் விமான மூலமான தபால் சேவை 1936 இல் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, 1936இல் இந்தியாவின் 'டாட்டா' நிறுவனத்திற்குரிய விமானமொன்றின்மூலம் கராச்சியிலிருந்து நத்தார் கடிதங்களை எடுத்துவந்த முதலாவது விமானம் ரத்மலானை விமான நிலையத்தினை வந்தடைந்தது.








### உலக தபால் சங்கம்

உலகம் முழுவதும் இயங்கி வருகின்ற தபால் சேவைகளை தொடர்புபடுத்தும் பணியினை உலக தபால் சங்கம் மேற்கொள்கின்றது. 1874 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில், அந்நாட்டு அரசாங்கத்தின் உதவியுடன் 22 நாடுகளைச் சேர்ந்த தபால் முகவர்களின் ஏகமனதான தீர்மானத்தின்படி, 'பேர்ன் ஒப்பந்தம்' கைச்சாத்திடப்பட்டது. இதனை அடுத்தே 'ஜெனரல் போஸ்டல் யூனியன்' (General Postal Union) என்ற பெயரில் பொது தபால் சங்கம் தாபிக்கப்பட்டது. இந்த சங்கம், 1878 ஆம் ஆண்டு முதல் 'உலக தபால் சங்கம்' (Universal Postal Union) என பெயர் மாற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைநிறுத்தப் போராட்டங்கள் குறைவாக நிகழும் நாடுகள்




இலங்கையில் மிகவும் பிரபல்யம் பெற்ற சொல்லாக வேலைநிறுத்தம் உள்ளது. எங்கு பார்த்தாலும் தொழிற்சங்கப் போராட்டத்தின் பிரதான உத்தியாக வேலைநிறுத்தம் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றது. எனினும், வேலைநிறுத்தப் போராட்டம் என்பது மிகவும் அரிதாக நிகழும் நாடுகளும் உலகில் உள்ளன. அந்தவகையில் உலகில் சிறந்த ஊழியர்களையும், ஊழியர்களுக்கான உரிமைகளையும் சிறந்த முறையில் வழங்கும் நாடுகளும் உள்ளன. அதற்கமைய, வேலைநிறுத்தப் போராட்டங்கள் அரிதாக நிகழும் பிரதான ஐந்து நாடுகள் பற்றிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.

## நோர்வே



ஸ்கென்டிநேவியா நாடுகளில் மிகவும் சிறந்த நாடாகவும், உலகில் அமைதியான நாடாகவும் கருதப்படும் நோர்வேயில் வேலைநிறுத்தப் போராட்டம் என்பது அரிதிலும் அரிதான விடயமாகும். இங்கு தனியார் வசம் 45 சதவீத நிறுவனங்கள் உள்ளன. எஞ்சிய 55 சதவீதம் அரசு வசமே உள்ளது. வேலைநிறுத்தப் போராட்டம் குறைவாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

## டென்மார்க்

வேலைநிறுத்தப் போராட்டங்கள் நிகழாத நாடாக டென்மார்க்கினைக் குறிப்பிட முடியும். கடந்த ஆண்டு இவ்விடயத்தில் நான்காவது இடத்தினைப் பெற்றிருந்த டென்மார்க் தற்போது முன்னேறி முதலாவது இடத்தினைப் பெற்றுள்ளது.



டென்மார்க்கின் ஊழியர்களுக்கான உரிமைகள் அனைத்து மட்டத்திலும் நிர்வகிக்கப்படுகின்றமை இந்த வெற்றியின் இரகசியமாகும். இதற்கு புத்திசாதுரியம் மிக்க அரசாங்கமும் மக்களும் அவசியமாகும்.

## நெதர்லாந்து



வேலைநிறுத்தப் போராட்டம் குறைவான நாடுகளில் நெதர்லாந்து நான்காவது இடத்தினை வகிக்கின்றது. இங்கு நினைத்த மாத்திரத்தில் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள முடியாது. போராட்டத்திற்கான காரணத்தினை ஒரு குழுவின் முன்னே சமர்ப்பித்து அதற்கான அனுமதியினைப் பெற்று அந்த அனுமதியினை உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து சட்ட ரீதியிலான அங்கீகாரத்தினைப் பெறல் வேண்டும். சட்ட ரீதியிலான அனுமதி கிடைத்தால் மட்டுமே வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள முடியும். இந்த சட்டத்தினை மதிக்காதவர்கள் நாடு கடத்தப்படுவர்.

## சுவீடன்

ஸ்கென்டிநேவிய நாடுகளில் ஒன்றான சுவீடன் வேலைநிறுத்தப் போராட்டங்கள் குறைவான நாடுகளில் மூன்றாவது இடத்தினைப் பெறுகின்றது. இங்கு 6 மணித்தியாலங்கள் மட்டுமே பணியாற்ற வேண்டும்.மேலும், வாரத்திற்கு 50 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட நேரம்பணியாற்றுபவர்கள் சுமார் 1 சதவீதத்தினர் மட்டுமே. அத்துடன், மனித உரிமைகள் நன்கு பேணப்படுகின்ற நாடாகவும் மற்றும் ஊழியர் உரிமைகள், பாதுகாப்பு என்பன சிறப்பான முறையில் பேணப்படும் நாடாகவும் சுவீடன் திகழ்கின்றது.



## ஒஸ்ட்ரியா



வேலை நிறுத்தங்கள் குறைந்த ஐந்தாவது நாடாக ஒஸ்ட்ரியா திகழ்கின்றது. இங்கு வேலை நிறுத்தப் போராட்டங்களை நடாத்துவதற்கு அரசிடமிருந்து அனுமதியினை பெற வேண்டும். சிறந்த ஊழியர் உரிமைகளைக் கொண்ட நாடாக ஒஸ்ட்ரியா திகழ்வதால் வேலைநிறுத்தப் போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாதிருக்கின்றது.

**உலகில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளே, வேலைநிறுத்தப் போராட்டங்கள் அதிகமாக நடைபெறும் நாடுகளாகக் கருதப்படுகின்றன. ஒரு நாட்டில் நடைபெறும் வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு நியாயமான காரணங்கள் இல்லாவிடின், அப்போராட்டங்கள் மனித உரிமைகளாகக் கருதப்படாமல் மிலேச்சத்தனம் மிக்க விடயங்களாகவே கருதப்படக் கூடிய ஆபத்தும் உள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலிருந்து விடைபெற்ற எதற்கும் அஞ்சாத முட்டாள் பறவை

*இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள 'முருசி' என்ற ஒரு தீவு. இது 16ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் காலனித்துவப் பகுதியாகக் காணப்பட்டது. முதன் முதலாக 'முருசி' தீவுக்கு சென்ற ஒல்லாந்தக் கடற்படையினர் அங்கு வியப்பூட்டும் அதேநேரம் வித்தியாசமான தோற்றம் கொண்ட ஒரு பறவையைப் பார்த்துள்ளனர். இந்த பறவை மனிதரைக் கண்டு அஞ்சவில்லை. அது ஒரு பறவையாக இருப்பினும் பறக்க முடியாத பறவையாகவே இருந்தது. இதன் தோற்றம் மற்றும் மனிதரைக் கண்டு அஞ்சாத இயல்பு காரணமாக, ஒல்லாந்தர்கள் இதனை 'டோடோ' என்று அழைத்தனர். 'டோடோ' என்ற சொல் ஒல்லாந்த மொழியில் 'முட்டாள்' என்று அர்த்தமாகின்றது.*


*மனிதனின் செயற்பாடுகள் காரணமாக, மனிதனின் கண் முன்னே அழிவினை எதிர்நோக்கிய முருசி தீவுக்குரிய பறவை இனமாக, இந்த பறவை இனம் கருதப்படுகின்றது.*


முற்று முழுதாக அழிவடைந்த 'டோடோ' பறவையின் எலும்புகளும் படிம எச்சங்களுமே தற்போது உலகில் எஞ்சியுள்ளன. அக்கால கட்ட ஒல்லாந்தக் கடற்படை வீரர்களின் ஓவியங்களின்படி, இப்பறவை சாம்பல் நிறத்தினையும், வெண்மை நிறத்தினையும் கொண்டதாக வரையப்பட்டிருந்தது. எனினும் புதிய ஆய்வுகளின்படி, இப்பறவை இளம் சாம்பல் நிறம், நீல நிறம் மற்றும் மண்ணிறம் கொண்ட அழகிய நிறப் பறவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

உலகிலிருந்து விடைபெற்ற இப்பறவையின் விஞ்ஞானப் பெயர் 'Raphus cucullatus' என்பதாகும். இது 3 அடி உயரம் கொண்டது. 17.5 கிலோகிராம் எடை கொண்டது. இவை புறாக் குடும்பத்தினைச் சேர்ந்த பறவையாகும். இவற்றின் மிகவும் நெருங்கிய உறவுப் பறவையாக 'நிக்கோபார்' பறவையை குறிப்பிட முடியும். அத்துடன், ஒல்லாந்த நாட்டுக் கடற்படை வீரர்கள் டோடோ பறவையினை 1598 ஆம் ஆண்டில் தான் முதன்முதலில் பார்த்துள்ளனர். அதன் பின்னர் சுமார் 64 ஆண்டுகளின் பின் இப்பறவை அத்தீவிலிருந்து அடியோடு அழிந்து விட்டது.

'டோடோ' பறவைகள் தமது வாழ்க்கைச் சக்கரத்தில் பல சந்தர்ப்பங்களில் தமது இறகுகளை உதிர்த்து விட்டு அழகிய நிறத்திற்கு இறகுகளை மாற்றிக் கொண்டதாக புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இனப்பெருக்க முதிர்ச்சி நிலையை அடையும் போது, இப்பறவைகள் இறகுகளின் நிறங்களை மாற்றிக் கொள்கின்றன.

டோடோ பறவைகள் குறித்த புதிய ஆய்வுகளை தென்னாபிரிக்காவின் கேப்டவுன் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக் குழு மேற்கொண்டிருந்தது. கலாநிதி டெல்பின் அக்னஸ் என்பவர் இந்த ஆய்வுக்குழுவுக்குத் தலைமை தாங்கினார்.


எலும்புகள்


ஓவியம் ஒன்று



படிம எச்சமாக மாறியிருந்த சுமார் 20 டோடோ பறவைகளின் எலும்புகளை அடிப்படையாக வைத்தே, இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தென் அரைக்கோளப் பகுதியில் கடும் காற்று மற்றும் புயல் தாக்கங்களை அடிக்கடி எதிர்கொள்ளும் முருசி தீவின் காலநிலையை எதிர்கொள்ளும் விதமாகவே, இந்த டோடோ பறவைகளின் வளர்ச்சி அமைந்திருந்தமையும் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டது.


நிக்கோபார் புறா






முருசி தீவு



Digitized by Noolaham Foundation.

# தெரிந்து கொள்வோம்



அமெரிக்க வெள்ளை மாளிகையில் வசித்த முதலாவது அமெரிக்க ஜனாதிபதி யார்?
**ஜோன் ஆடம்ஸ்**



தண்ணீர் காய்ச்சல்' என்று அழைக்கப்படும் நோய் எது?
**மலேரியா**



மரங்களில் சிற்பங்களைச் செதுக்கும் கலையின் பெயர் என்ன?
**ஸைலோ கிராபி**
(Xylography)




ஆசிய விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டும், இடமும் எவை?
**1951, டெல்லி**



கிரிக்கெட் டெஸ்ட் போட்டியொன்றில் வீரராகவும் நடுவராகவும் பணியாற்றிய கிரிக்கெட் வீரர் யார்?
**வில்லியம் கன் (இங்கிலாந்து)**




உலகிலேயே மிக நீளமான நதி எது?
**அமேசன்**




NAFTA (North American Free Trade Agreement) என்பது என்ன?
**வட அமெரிக்கா, கனடா, மெக்சிகோ நாடுகளுக்கிடையே உருவான வர்த்தக ஒப்பந்தம்**

# பழைய ரோமாபுரியில் வித்தியாசமான தீர்மானம்

பழைய ரோமாபுரி சட்டவை பிரதிநிதிகளில் யாராவது புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர எண்ணினால் அச்சட்டத்தை தூக்கு மேடையில் நின்றுகொண்டே வாசிக்க வேண்டும். அதன்பின்னர் ஏனைய பிரதிநிதிகளால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவரது உயிர் பிழைக்கும், நிராகரிக்கப்பட்டால் சட்டத்தைக் கொண்டுவந்தவர் தூக்கில் இடப்படுவார். இவ்வாறான வினோதமான ஒரு நடைமுறையே அங்கு கையாளப்பட்டது.



# உழவாரப் பறவை

உழவாரப் பறவை என்றழைக்கப்படும் Swift பறவையானது, நீண்ட தூரம் களைப்படையாமல் பறக்கும் திறன் கொண்ட பறவை இனமாகும். இது மணிக்கு 100கி.மீற்றர். வேகத்தில் பறக்கும். இந்தப் பறவையின் இறக்கையின் நீளம் மட்டும் 38 செ.மீற்றர் ஆகும். இவை இரவு நேரத்தில் பறக்கும் ஆற்றல் வாய்ந்தவையாகும்.





# நாயின் சிறப்பம்சம்

உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் அனைத்து சீதோஷ்ண நிலைகளிலும் வளரக்கூடிய ஒரே ஒரு பிராணி நாய் ஆகும். நாயானது, ஓர் இடத்தில் உறங்குவதற்கு முன்னர் சுற்றிச் சுற்றி வரும் பழக்கத்தை உடையது. இந்தப் பழக்கம் நாய்கள் ஆதிகாலங்களில் அதாவது, வீட்டுப் பிராணியாக மனிதன் வளர்ப்பதற்கு முன்னர் காடுகளில் வாழ்ந்தபோது, கரடு முரடான தரையைச் சமன்படுத்துவதற்காக இப்படி சுற்றிச் சுற்றி வரும் வழக்கத்தைக் கொண்டிருந்ததாக கூறப்படுகின்றது. காலப் போக்கில் இப்பழக்கம் நாய்களிடம் இயல்பாகவே நிலைத்துவிட்டதாக கருதப்படுகின்றது.





# மாணவர் கழகம்

'விஜய்' மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி
'விஜய்' மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

பெயர் :..................................................
..................................................
முகவரி:..................................................
..................................................
..................................................
பாடசாலையின் பெயர் :..................................................
..................................................
வகுப்பு :..................................................
திகதி:.................................. ..................................
பெற்றோர் கையொப்பம்

படத்தை இங்கே ஒட்டவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்தினன் ஆலயம்

கிரேக்க கட்டடக் கலையின் சிறப்பினை வெளிக் காட்டும் அதி சிறந்த மிகப் பெரிய நினைவுச் சின்னமாக பாத்தினன் ஆலயத்தை கருத முடியும். கி.மு 447இல் இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏதென்சின் அரச பொற்காலத்திலேயே இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிர்மாணப் பணிகள் கி.மு 438 ஆண்டில் நிறைவடைந்துள்ளன. கவயினுஸ் மற்றும் இக்டினஸ் ஆகிய கலைஞர்கள் இந்தக் கட்டடத்தினை நிர்மாணித் துள்ளனர். பளிங்குக் கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யுத்தத்தின் அதிபதிக் கடவுளான அத்தீனாவுக்காக இந்த ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.




## நிதிக் களஞ்சியம்

கி.மு 480இல் நிகழ்ந்த பர்சியர்களின் ஆக்கிரமிப்புகளின் போது 'பாத்தினன் ஆலயம்' அழிவினை எதிர்நோக்கியது. பின்னர் அதே இடத்தில் இது மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது. ஆரம்ப காலங்களில் இந்த கட்டடத்தினை நிதிக் களஞ்சியமாகப் பயன்படுத்தியுள்ளனர். எதிர்பாராத விதமாக 5ஆம் நூற்றாண்டில் இந்த கட்டடம் கிறிஸ்தவ தேவாலயமாக மாறியது. 1460இல் ஒட்டோமன் பேரரசின் வளர்ச்சியுடன் இந்த கட்டடம் இஸ்லாமிய பள்ளிவாசலாக மாறியுள்ளது. பாத்தினன் ஆலயத்தில் உள்ள சிற்பங்கள் வடிக்கப்பட்ட சுவரின் நீளம் 550 அடியாகும்.

## எலிஜீன் மாபிள்ஸ்

இந்த 'பாத்தினன்' ஆலயத்தில் உள்ள பளிங்குக் கற்கள் 'எலிஜீன் மாபிள்ஸ்' அல்லது 'பாத்தினன் மாபிள்ஸ்' என்று அழைக்கப்படுகின்றது. கூரையில் ஓடுகளைப் பொருத்துவதற்கு மரத் தூண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் வெளிப்பகுதியில் 46 தூண்களும் உள்ளகப் பகுதியில் 23 தூண்களும் உள்ளன. இத்தூண்கள் 10.7 மீற்றர் உயரம் கொண்டது. அதன் சுற்றளவு 1.9 மீற்றர் ஆகும். உள்ளக தூண்கள் இரு மாடிகளைக் கொண்டுள்ளன. இவை உயரமாகவும் பருமனாகவும் தென்படுகின்றன. இதனை 'டொரிக் தூண்' என்று அழைக்கின்றனர்.







## அத்தீனாவின் சிலை

இங்குள்ள சிற்பங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள சந்திர தேவதை மற்றும் குதிரைகள் கடலில் மூழ்கும் விதம், ஹேலியாஸ் என்ற யுத்த வாகனம் கடலில் இருந்து வெளிப்படும் விதம் என்பன மிகவும் சிறப்பான இடத்தினை வகிக்கின்றன. அத்தீனா தேவதை எழுந்து நிற்கும் விதத்தில் உள்ள 30 அடி கொண்ட உருவச்சிலை ஆலயத்தின் உட்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளது. தேவதையின் 70 அடி கொண்ட மேலும் ஒரு சிலை பாத்தினன் ஆலயத்தில் உள்ளது. இங்கிருந்து பெறப்பட்ட அரிய பல கலைப் பொக்கிஷங்கள் தற்போது அருங்காட்சியகத்தின் தொல்பொருளாக மாறியுள்ளன.

(-இ)

## கைவேலை



# கடதாசியில் அழகிய மலர்கள் செய்வோம்



### தேவையான பொருட்கள்

1. மலருக்கு விரும்பிய நிறத்தில் கடதாசி
2. பச்சை நிறக் கடதாசி
3. கம் (பசை)
4. ஈக்கில்

### செய்முறை



உங்களுக்குத் தேவையான அளவுகளில் மலருக்காக தெரிவு செய்யப்பட்ட நிறக் கடதாசியில் செவ்வகங்களை வெட்டி, படத்தில் காட்டியுள்ளவாறு சுருட்டி கடதாசியின் இறுதி முனைப்பகுதியில் கம் பூசி ஒட்டிக்கொள்ளவும்:



அதன்பின்னர் சுருட்டிய பகுதிகளின் மேல் முனையில் இதழ் வடிவம் வரும் வகையில் கத்திரிக்கோலால் வெட்டி அதனை மலர்போன்று வடிவமைத்து அதனை ஈக்கிலுடன் இணைத்துக்கொள்ளவும்.




படத்தில் உள்ளவாறு பச்சை நிறக் கடதாசியில் இலை வடிவத்தை வெட்டி அதனை இலையாக வடிவமைக்குக. மேலும், ஈக்கிலை மலரின் தண்டாக அலங்கரிக்கவும்.



இப்போது அழகிய மலர்கள் தயார், இவற்றை பூச்சாடிகளில் அழகாக வைத்து உங்கள் வீட்டை அலங்கரிக்கவும்.

தொகுப்பு: ஏ.ரம்ஸான்

## உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்புங்கள்



'விஜய்' வாசகர்களே...

'விஜய்' பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கப் படைப்புக்களுக்கு களம் கொடுக்கும் மாணவர் ஆக்கங்கள் பகுதியை மீண்டும் ஆரம்பிக்க உள்ளோம்.

கதை, கவிதை, கட்டுரை, கவர்ந்த காட்சி, சமுதாயக் கருத்துக்கள், ரசித்தகாட்சி, மறக்க முடியாத சம்பவங்கள் என பலவிதமான ஆக்கங்களையும் நீங்கள் அனுப்பலாம். அவை சுருக்கமாக இருத்தல் வேண்டும். உங்கள் திறமையை வெளிப்படுத்த இந்த களத்தைப் பயன்படுத்துங்கள். எனவே, அவை உங்கள் சொந்தப் படைப்புகளாக இருக்கட்டும்.



அனுப்ப வேண்டிய முகவரி:
மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல-2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலங்காரப் புறாக்கள்





புறாக்களில் பல வகைகள் உள்ளன. அவற்றில் ஒரு வகைதான் 'அலங்காரப் புறாக்கள்' (Fancy pigeons) ஆகும். இவ்வகைப் புறாக்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இதனால், இவை அழகுக்காகவும் காட்சிப் படுத்தலுக்காகவும் பந்தயங்களில் ஈடுபடுத்துவதற்காகவும் மற்றும் பல வர்த்தக நோக்கங்களுக்காகவும் வளர்க்கப்படுகின்றன.


அலங்காரப் புறாக்கள் எளிதில் நோய்வாய்ப்படக்கூடியவை. எனவே, அவற்றைக் கவனமாகப் பராமரிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவற்றில் தொற்றுண்ணிகள் பரவ வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது. ரோலர், நன், இங்கிலிஷ் மெகபி, ஹெல்மட், ஐஸ் பிஜன், ஸ்டார்லிங், ஃபேன்டெய்ல், ஃப்ரில்பெக், ஜெகோபின், லாஹோர் போன்றவை அலங்காரப் புறாக்களில் சில வகைகளாகும்.



# இரவு நேரம்

பூமி தனது அச்சில் சுழன்று வரும்போது, சூரியனுக்கு எதிர்த்திசையில் இருக்கும் பகுதிகளுக்கு சூரிய ஒளி கிடைப்பதில்லை. இதனால் அப்பகுதிகள் இருட்டாக இருக்கும். இருட்டாக இருக்கும் நேரத்தையே நாம் 'இரவு' என்கின்றோம்.


இரவு நேரமானது, எமது உடல் ஓய்வுக்கும் மன அமைதிக்கும் வழிவகுக்கின்றது. எனினும், எம்மில் சிலர் இரவு நேரத்தில் போதியளவு உறக்கம் கொள்வதில்லை. இதனால், உடல் மற்றும் உள ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். எனவே, இரவு நேரத்தில் போதியளவு நித்திரை செய்வதன்மூலம் உடல் - உள ஆரோக்கியத்தைப் பேணிக்கொள்ளலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.






# நெருங்கிய தொடர்புள்ள உடல் உறுப்புகள்

எமது உடல் உறுப்புகளில் காது, மூக்கு, தொண்டை (Ear, Nose, Throat) போன்றவை மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவை. இதில் ஏதாவது ஓர் உறுப்பில் நோய்த்தொற்று ஏற்பட்டாலும் ஏனைய இரு உறுப்புகளும் அந்தப் பாதிப்பை எதிர்கொள்கின்றன. எனவேதான், இந்த மூன்று உறுப்புகளும் ஒரே பிரிவின்கீழ் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகின்றது. காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான நோய்களை 90 சதவீதம் வரை மருந்துகளால் குணப்படுத்திவிட முடியும். இந்த மூன்று உறுப்புகளையும் முறையாகக் கவனித்தாலே போதும்; உடலின் பல்வேறு பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம்.





# மேகங்களின் நகர்வு

சிறிய நீர்த்துளிகளின் திரட்சியே 'மேகங்கள்' ஆகும். இந்த மேகங்கள் எவ்வாறு அங்கும் இங்கும் நகர்கின்றன என்று தெரியுமா? அதாவது, வளிமண்டலத்தில் பல்வேறு உயரங்களில் காற்று வீசுகின்றது. இவ்வாறு வீசும் காற்றுத்தான் மேகங்களை அங்கும் இங்கும் நகர்த்துகின்றது.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, ஒக்டோபர் 25 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 25, 2017.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org